O.S.No.80/2022 – Date : 20.01.2026

DW1 – சுப்ரமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எங்கள் கிராமத்தின் பெயர் என்ன என்றால் வி.மேட்டுர் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 4 பேர்கள். எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் உள்ளதா என்றால் உள்ளது. வாதி மாதுவும் நானும் ஒரே பள்ளியில் படித்தோமா என்றால் இல்லை. வாதியும் வி.மேட்டுரை சேர்ந்தவர் என்றால் சரி. வாதிக்கும் எனக்கும் கிட்டத்தட்ட ஒரே வயது என்றால் 1 வயது முன், பின் இருக்கலாம். நான் படிக்கும் காலத்தில் வாதி எனக்கு முன்னரே படித்திருக்கலாம் என்றால் சரி. நான் எந்த வருடம் படித்தேன் என்றால் வருடம் ஞாபகமில்லை. எனக்கு பேப்பர் படிக்க தெரியும், எழுத படிக்கத்தெரியும், எனக்கு பெரிய படிப்பு இல்லை என்றால் சரி.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் கிரய ஒப்பந்தம் என்றால் சரி. 12.03.2021ல் கிரய ஒப்பந்தம் பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் பணம் திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி பதிவு செய்து கொடுத்தேன். ஆனால் அது கிரய ஒப்பந்த பத்திரம் என்றால் எனக்குத் தெரியவில்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கேரளாவில் கான்க்ரீட் போடும் வேலை செய்து வந்தேன். வாதி மாதுவின் அப்பா, அண்ணன்

தம்பிகள், அக்கா தங்கைகள் வி.மேட்டூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரி. வாதிக்கு பூர்வீக சொத்து வி.மேட்டூரில் உள்ளது என்றால் சரி. வாதியின் நிலமும் எனது நிலமும் அருகருகே உள்ளது என்றால் கொஞ்சம் தூரத்தில் உள்ளது.

வாதி தருமபுரியில் ஓட்டல் வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் சரி. வாதியும் அவரது மகன்களும் நன்றாக சம்பாதித்து வருகிறார்கள் என்றால் சரி. நான் கடன் வாங்கியதாக கடன் பத்திரம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரி. நான் வாதியிடம் ரூ.10,00,000/- வாங்கியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரி. வாதிக்கு நான் மாத மாதம் ரூ.15000/- வட்டி கொடுத்ததாக ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கையில் நேரடியாக கொடுத்தேன். வாதியின் போன் நெம்பர் தெரியும் என்றால் நான் வீட்டில் எழுதி வைத்துள்ளேன்.

நான் உண்மையில் வட்டி கொடுக்க வேண்டும் என்றால் போன்பே ஜீபே மூலம் வாதிக்கு செலுத்தியிருக்கலாம் என்றால் போன்பே மற்றும் ஜீபே பற்றி எனக்குத் தெரியாது. நான் வாதிக்கு நேரடியாக வங்கி கணக்கில் செலுத்தியிருக்கலாம் என்றால் அவர் கையில்தான் கொடுக்க கூறினார். நான் வாதிக்கு வட்டி கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் அவ்வாறு வட்டி கொடுத்திருந்தால் ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் வட்டி

செலுத்தியிருந்தால் மேலே சொன்ன முறையில் செலுத்தியிருக்கலாம் என்றும் அவ்வாறு செலுத்தவில்லை என்பதால் வட்டி செலுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் என்ன விலைக்கு வாங்கினேன் என்றால் ரூ.13,00,000/–க்கு கிரயம் வாங்கினேன். நான் பத்திர பதிவு எத்தனை லட்சத்திற்கு செய்தேன் என்றால் அரசு வழிகாட்டுதல் மதிப்பு படி கிரயம் செய்தேன். மேற்படி கிரய தொகை என்ன என்று கூற முடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் ரூ.13,00,000/–க்கு கிரயம் வாங்கவில்லை என்றும் நான் கிரயம் வாங்கியபோது கிரயம் செய்த காலத்தில் அது ரூ.4,00,000/– இல்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு 3 ஆண்டுகள் கழித்து தாவா சொத்தை நல்ல விலைக்கு ரூ.12,00,000/– விலை நிர்ணயம் செய்து ரூ.10,00,000/– முன் பணம் பெற்றுக்கொண்டு தாவா கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் அரசியல் கட்சியில் பொறுப்பில் உள்ளேனா என்றால் இல்லை. நான் எங்கள் கிராமத்தில் கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ளேன் என்றும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிதான் கட்சி பொறுப்பில் உள்ளார். எனக்கு நன்றாக எழுத படிக்க தெரியும் என்றும், நான் அந்த பகுதியில் விவரமான ஆள் என்றால் சரியல்ல. நான் 3ம் வகுப்புதான் படித்துள்ளேன். கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தது எனக்கு

நன்றாக தெரியும் என்றும் முழு சுயநினைவோடுதான் ரூ.10,00,000/- பெற்றுக்கொண்டு கிரய ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. பணத்தை வாங்கி என்ன செய்தேன் என்றால் வீட்டு செலவு மற்றும் பிள்ளைகளின் படிப்பு செலவிற்கு பயன்படுத்தினேன். பிள்ளைகள் படித்து முடித்துவிட்டார்கள் என்றால் மகள் படிப்பு முடித்துவிட்டார். மகன் கல்லூரியில் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டார். நான் வாங்கிய பணத்தில் வீட்டு தேவைகளை பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரி. நான் வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு, தற்போது சொத்து போய்விடக்கூடாது என்பதற்காக கடன் பத்திரம் எழுதி கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி தரப்பில் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.